# சொற்கள் இணைந்து தொடரானது

ஒரு சொல்லே போதும். தமிழ் பேசலாம்.

வணக்கம், நன்றி, வா, போ, சரி, இல்லை, ஆம், நல்லது, எடு, கொடு, படி, பார், சாப்பிடு, நடி, படு, தூங்கு, ஓடு, உட்கார், அமர், திற, மூடு. தமிழ்பேச இவை போன்ற சொற்களே போதும். சொல்லும் சொற்களைச் சரியான ஒலிப்பு முறையில் (கட்டளையாக இருந்தால் அதிகாரத்தோடு, வேண்டுகோளாக இருந்தால் அன்போடு, செய்தியாக இருந்தால் தெளிவாக) சொன்னாலே போதும். வா என்ற சொல்லை இந்த மூன்று வகைகளில் ஒலித்துப் பாருங்கள் தெளிவாகப் புரியும்.

இப்படித்தான் மொழியே அறியாத பலரும், ஒரு சில சொற்களை வைத்துக் கொண்டு தமிழைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். தமிழுக்கு உரிய சிறப்பு இது தான். ஒரு சொல்லாக இருந்தாலும் இது சரியானதுதான். (வா என்பதில் நீ என்னும் எழுவாய் மறைந்துள்ளது (தோன்றா எழுவாய்) எனவே அது நீ வா என்றே பொருள்படும்) ஓரெழுத்து ஒரு சொல் போல, ஒரு சொல்லே ஒரு தொடராகவும் இங்கு அமைந்துள்ளது)

இரண்டு சொற்கள் இணைந்து, ஒரு செய்தியைக் காட்டுவதாக இருந்தால் அது தொடர் ஆகும்.
நீ வா, பாடம் படி, தண்ணீர் குடி, புத்தகம் கொடு, கை கழுவு, முகம் துடை, உடை அணி, செடி வளர்.

இப்படித்தான் குழந்தைகளும், தொடக்கநிலையில் பேசுகிற வேற்றுமொழி நண்பர்களும் பேசுகிறார்கள். இப்படித்தான் தொடக்கநிலை மாந்தனும் பேசி இருப்பான்.

இந்த இரண்டு சொற்களில் ஒன்று பெயர்ச்சொல், மற்றது வினைச் சொல், ஒரு பெயர்ச் சொல்லும், ஒரு வினைச் சொல்லும் இணைந்தால் ஒரு தொடர் உருவாகிறது.




பெயர்ச் சொற்கள் + வினைச் சொற்கள் = தொடர்

கை தூக்கு, பனை வளர், கடல் பார், ஓட்டுநர் யார், தம்பி வா, ஊர்தி ஓட்டு, கல் தூக்கு, மரம் நடு, படம் காட்டு, நாடு செல், வீடு திரும்பு, நொடி கூறு, மணி சொல், பச்சை வரை, கோபம் கொள், இலை பறி, கை ஆட்டு, பாடல் பாடு, படித்தல் நிறுத்து, படிப்பவன் சொல், கொலை செய், அவன் அழை, வஞ்சம் தவிர், கட்டடம் கட்டு, விளம்பரம் செய்.

நாள்கள் செல்லச் செல்ல மொழியைச் செப்பமாகப் பேசுகிற தன்மை உருவான பொழுது ஒரு தொடர் என்பது அடிப்படையாக ஒரு பெயர்ச் சொல்லும், ஒரு வினைச் சொல்லும் இணைந்து உருவானாலும், பெயர்ச்சொற்களோடு வேற்றுமை உருபுகளும், வினைச் சொற்களோடு காலம், திணை, பால், எண், இடம், எச்சம் ஆகியவை இணைந்தும் சொற்கள் உருவாகி, தொடராகின.

பெயர்ச் சொல் + வேற்றுமை உருபு = உருவான சொற்கள். (பெயர்ச்சொல் = பானை)

| | |
|---|---|
| 2 (ஐ), | பானையை |
| 3 (ஆல், ஒடு, உடன், கொண்டு), | பானையால், பானையோடு, பானையுடன், பானைகொண்டு |
| 4 (கு), | பானைக்கு |
| 5 (இன், இல், நின்று, இருந்து), | பானையின், பானையில், பானையினின்று, பானையிலிருந்து |
| 6 (அது, உடைய) | பானையது, பானையினுடைய |
| 7 (இல், கண், இடை, முன், பின்,<br>மேல், கீழ், உள்), | பானையில், பானையின்கண், பானையிடை, பானைமுன், பானைபின்<br>பானைமேல், பானைகீழ், பானையுள் |

பிழை எண் 8 = வேற்றுமை உருபுகள் பெயர்ச் சொற்களோடு இணைந்து உருவாகும் சொற்கள் என்ன பொருளைத் தருகின்றன என்ற புரிதல் இல்லாததால், பிழையான தொடர்கள் உருவாக்கப்படுகின்றன. பொருள் உணர்ந்து இதைத் தவிர்க்க வேண்டும்.

வினைச் சொற்களோடு காலம், திணை, பால், எண், இடம், எச்சம் இணைந்து சொற்கள் உருவாகின்றன.

காலம் = கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ( படித்தேன், படிக்கிறேன், படிப்பேன் )

திணை = அஃறிணை, ( உயிரற்றவை (மண், கல்) - உயிருள்ளவை தாவரம் (மரம், செடி, கொடி) - உயிருள்ளவை விலங்குகள் (ஆடு, மாடு, பறவை, மீன், தவளை) ) உயர்திணை ( மனிதன் )

பால் = ஆண்பால் (இவன், அவன், அழகன்) , பெண்பால் (இவள், அவள், அழகி), பலர்பால் (அவர், இவர், இவர்கள்)

எண் = ஒன்று (ஒருமை, இருக்கிறது), , பல (பன்மை, இருக்கின்றன)

இடம் = தன்மை, முன்னிலை, படர்க்கை (நான், நீ, அவன்)

எச்சம் = வினை முற்று, வினை எச்சம் (முடிந்தது என்பது வினைமுற்று, முடிந்து என்பது வினை எச்சம்)

வினைச்சொல் = செய்கிறான், (செய்கிறான் = செய் + கிறு + ஆன்)

இந்த வினைச் சொல்லில் (பகுதி) செய் (வினைச்சொல்) + (இடைநிலை) கிறு (நிகழ் காலம்) + (விகுதி) ஆன் (உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, வினைமுடிந்தது என்பதையும் காட்டுகிறது) (ஒரு வினைச் சொல்லின் பகுதி வினையையும், இடைநிலை காலத்தையும், விகுதி திணை, பால், எண், இடம், வினைமுற்றா எச்சமா என்பதையும் காட்டும் )

ஒரு பெயர்ச்சொல்லும், ஒரு வினைச் சொல்லும் இணைந்தால் ஒரு தொடர் ஆகிறது.
(பெயர்ச் சொல் என்பது எழுவாய், வினைச்சொல் என்பது பயனிலை)
ஆக ஒரு தொடர் உருவாகுவதற்கு ஒரு எழுவாய் + ஒரு பயனிலை இன்றியமையாதன.

பானையைச் செய்கிறான். என்பது இரண்டு சொற்களை உடைய ஒரு தொடர்.
இந்தத் தொடரில் = பானை பெயர்ச்சொல் + செய்கிறான் வினைச்சொல், ஆக இந்தத் தொடரில் ஒரு பெயர்ச்சொல் + ஒரு வினைச்சொல், (ஒரு எழுவாய் + ஒரு பயனிலை) இருக்கின்றன.

பானையை யார் செய்தார்? என்ற *__வினாவைக்__* கேட்டால்.,
கண்ணன் பானையைச் செய்தான் என்று மூன்று சொற்களில் இந்தத் தொடர் அமைகிறது.
இந்தத் தொடரில் கண்ணன் என்பது எழுவாய், செய்தான் என்பது பயனிலை, பானையை என்பது செயப்படுபொருள்.

கண்ணன் பானையைச் செய்தான் - பானையை எதனால் செய்தான் என்று வினாக் கேளுங்கள். கண்ணன் பானையை மண்ணால் செய்தான். என்று வரும். - எங்கு செய்தான் என்று வினாக் கேளுங்கள். கண்ணன் பானையை வீட்டில் செய்தான். என்று வரும் - எதற்குச் செய்தான் என்று வினாக் கேளுங்கள். கண்ணன் பானையை விற்பதற்குச் செய்தான். என்று வரும்.

மேலே குறிப்பிட்டுள்ளபடி மூன்று சொற்களில் உருவான ஒரு தொடரை *__வினாக்கள் கேட்டு__* அந்தத் தொடருக்கான விளக்கத்தை வெவ்வேறு தொடராக அமைக்கலாம்.

*__வினாக்கள் கேட்டு__* அந்தத் தொடரை ஒரு நீளமான தொடராகவும் அமைக்கலாம்.

அவன் படிக்கிறான். (என்ன படிக்கிறான்?)
அவன் பாடம் படிக்கிறான். (எந்தப் பாடம் படிக்கிறான் ?)
அவன் தமிழ்ப் பாடம் படிக்கிறான். (எதற்குப் படிக்கிறான் ?)
அவன் தேர்வில் வெற்றிபெறத் தமிழ்ப்பாடம் படிக்கிறான். (எந்தத் தேர்வில் வெற்றிபெற ?)
அவன் முதலாண்டுத் தேர்வில் வெற்றிபெறத் தமிழ்ப்பாடம் படிக்கிறான்.

பயிற்சி செய்து நினைவில் நிறுத்துக !

பானையை எடுத்தான் = இந்தத் தொடரைப் பிரித்துப் பார்க்கவும்.
பானையை = பெயர்ச் சொல், எடுத்தான் = வினைச் சொல், மேலும் பிரிக்கவும்.

கீழுள்ள தொடர்களைப் பிரித்துப் பார்த்துத் தொடரின் அமைப்பை உணர்ந்து கொள்க.

படத்தை வரைந்தான். தாளில் படத்தை வரைந்தான்.

மரத்தில் ஏறினான். மரத்தில் மாம்பழத்தைப் பறித்தான்.

தண்ணீரைக் குடித்தான். காலையில் தண்ணீர் குடித்தான்

# பெயர்ச் சொற்கள் + வினைச் சொற்கள் = தொடர்.

## ( தொடர் அமைக்கப் பயிற்சி எடுக்கவும் )

வினைச் சொற்கள் : வா, குடி, போ, நட, கேள், பிடி, சமை, ஓடு, ஓட்டு, அடி, தூக்கு, வறு, அழு, சாப்பிடு, குதி, செய், வெட்டு, மித, போடு, தூக்கு, பார், ஏறு, ஆடு, பற, துலக்கு, மூடு, தோண்டு, உதை, கலக்கு, வரை, தட்டு, துடை, கூப்பிடு, கொடு, சிரி, திற, இழு, திரும்பு, காட்டு, தள்ளு, கழுவு, எடு, அசை, நடு, கத்து, தும்மு, பேசு, விளையாடு, காட்டு, நில், பாடு, வீசு, எழுது, சொல், உட்கார்,

மேலுள்ள வினைச் சொற்களோடு, விகுதி, இடைநிலையை இணைத்துச் சொற்களை ஆக்குக.
எ.கா. வந்தான், வருகிறான், வருகின்றான், வருவான்,
வருவானா ? வரமாட்டான். வரச்செய்தான். வருக, வரவேண்டும்.

+

**பெயர்ச் சொற்கள் : அழகன், தண்ணீர், பாடல், உணவு, மாடு, ஆடு, கல், மரம், நீ, அவன், அது,** காலை, மாலை, நொடி, குளம், இருக்கை, பெட்டி, பள்ளம், கொடி, படம்,

மேலுள்ள பெயர்ச் சொற்களோடு வேற்றுமை உருபுகளை இணைத்துச் சொற்களை ஆக்குக.
எ.கா. தண்ணீரை, தண்ணீரால், தண்ணீருக்கு, தண்ணீருடன், தண்ணீரில்

=

பெயர்ச் சொற்களையும், வினைச் சொற்களையும் இணைத்துத் தொடர் ஆக்குக.
எ.கா. தண்ணீரை வரச்செய்தான், தண்ணீருக்கு வருவான், தண்ணீருடன் வருவானா

### கீழுள்ள சொற்களைப் படித்து உணரவும்

அறிவன் இரண்டு புத்தகங்களை வாங்கினான்,
நாங்கள் கால்பந்து விளையாடுவோம்.
தோட்டத்தில் மலர்கள் பூத்துள்ளன. தீயினால் சுட்டபுண் ஆறாது.
ஆடுகள் தோட்டத்தில் மேய்கின்றன.
பணத்தைப் பெட்டியில் வைத்தான்,
குரங்கு மரத்தில் ஏறுகிறது.
புலிகள் காட்டில் வாழ்ந்தன.
மோகனுடைய வீடு எங்கே உள்ளது.
தரைமேல் செடிகள் வளர்கின்றன.
செடியில் இலைகள் உள்ளன.

# பிரித்தல் - உங்களின் பார்வைக்காக

| எண் | இடம் | சொல் | கடந்த (இறந்த) காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|---|---|
| ஒருமை | தன்மை | நான் | படித்தேன் | படிக்கிறேன் | படிப்பேன் |
| | | | படி+ த்+ த்+ ஏன் | படி+ க்+ கிறு+ ஏன் | படி+ ப்+ ப்+ ஏன் |
| | முன்னிலை | நீ | படித்தாய் | படிக்கிறாய் | படிப்பாய் |
| | | | படி+ த்+ த்+ ஆய் | படி+ க்+ கிறு+ ஆய் | படி+ ப்+ ப்+ ஆய் |
| | படர்க்கை | அவன் | படித்தான் | படிக்கிறான் | படிப்பான் |
| | | | படி+ த்+ த்+ ஆன் | படி+ க்+ கிறு+ ஆன் | படி+ ப்+ ப்+ ஆன் |
| | | அவள் | படித்தாள் | படிக்கிறாள் | படிப்பாள் |
| | | | படி+ த்+ த்+ ஆள் | படி+ க்+ கிறு+ ஆள் | படி+ ப்+ ப்+ ஆள் |
| | | அவர் | படித்தார் | படிக்கிறார் | படிப்பார் |
| | | | படி+ த்+ த்+ ஆர் | படி+ க்+ கிறு+ ஆர் | படி+ ப்+ ப்+ ஆர் |
| | | அது | நடந்தது | நடக்கிறது | நடக்கும் |
| | | | நட+ த்(ந்)+ த்+ அ து | நட+ க்+ கிறு+ அ+ து | நட+ க்+ கும் |
| பன்மை | தன்மை | நாம் | படித்தோம் | படிக்கிறோம் | படிப்போம் |
| | | | படி+ த்+ த்+ ஓம் | படி+ க்+ கிறு+ ஓம் | படி+ ப்+ ப்+ ஓம் |
| | முன்னிலை | நீங்கள் | படித்தீர் | படிக்கிறீர் | படிப்பீர் |
| | | | படி+ த்+ த்+ ஈர் | படி+ க்+ கிறு+ ஈர் | படி+ ப்+ ப்+ ஈர் |
| | படர்க்கை | அவர்கள் | படித்தார்கள் | படிக்கிறார்கள் | படிப்பார்கள் |
| | | | படி+ த்+ த்+ ஆர் கள் | படி+ க்+ கிறு+ ஆர்+ கள் | படி+ ப்+ ப்+ ஆர்+ கள் |
| | | அவை | நடந்தன | நடக்கின்றன | நடக்கும் |
| | | | நட+ த்(ந்)+ த்+ அன்+ அ | நட+ க்+ கின்று+ அன்+ அ | நட+ க்+ கும் |

படி - பகுதி, த் - சந்தி, கிறு, கின்று - இடைநிலை, த்(ந்) - விகாரம்

பகுதி + சந்தி + இடைநிலை + சாரியை + விகுதி = வினைச்சொல் இந்த அடிப்படையில் அமையும்

# தொடரின் வகைகள்

## பொருள் வகையால்.....

1)செய்தித் தொடர் = ஒரு செய்தியைச் சொல்லுவது

திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.

2) உணர்ச்சித் தொடர் = நகைப்பு, அழுகை, வியப்பு, அச்சம் முதலிய உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது

ஆ, ஆ என்ன அழகு! அந்தோ! என் செல்வம் பறிபோயிற்றே!, ஐயகோ! என் செய்வேன்?.

3) கட்டளைத் தொடர் = கட்டளைப் பொருளில் அமைந்த தொடர்

காலையில் எழு, கடமையைக் கண்ணாகக் கருது.

4) வினாத் தொடர் = என்ன, ஏன். எப்படி, எதற்கு முதலான சொற்கள் வினாத்தொடர்களில் வரும்.

வானமும் கடலும் நீலநிறமாயிருப்பது எதனால் ? அவன் புகழ் பெற்றது எப்படி ?

## அமைப்பு வகையால்.....

1) தனித் தொடர் = ஒரு எழுவாய் ஒரு பயனிலை உள்ள தொடர்.

நான் விளையாடுகிறேன். நான் படிக்கிறேன். அழகன் ஓடினான்.

2) தொடருகிற தொடர் = ஒரு எழுவாய் பல பயனிலைகளைப் பெற்று வருவது.

கண்ணன் கடைக்குச் சென்றான், கலித்தொகை வாங்கினான், கற்றுத் தெளிந்தான்.

உழவன் வயலை உழுது, விதை விதைத்து, நீர் பாய்ச்சிப் பயிரை வளர்த்தான்.

3) கலவைத் தொடர் = முதன்மைத் தொடர் ஒன்றும் துணைத் தொடர் ஒன்றும், பலவும் கலந்து வருவது.

ஔவையார் "இளமையில் கல்" என்று கூறினார்.

ஔவையார் கூறினார் என்பது முதன்மைத் தொடர்,

"இளமையில் கல்" என்பது துணைத் தொடர்.

ஆக இரண்டு தொடர்கள் கலந்து வந்ததுள்ளன.

அவன் தொடர்ந்து படித்ததால் முதல் வகுப்பில் தேறினான்.

சரியாகப் படிக்காததால் அவன் வெற்றி பெறவில்லை.

4அ) உடன்பாட்டுத் தொடர்,

ஒரு செய்தியை உடன்பட்டதை அல்லது ஏற்றுக் கொண்டதைக் குறிப்பது உடன்பாட்டுத் தொடர்.

காலத்தில் பணிக்கு வருவேன். கருத்தாகப் பணியைச் செய்வேன்.

4ஆ) எதிர்மறைத் தொடர் ஒரு செய்தியை மறுத்துக் கூறுவதாக வரும் தொடர் எதிர்மறைத் தொடர்.

உரிய நேரத்தில் பணிக்கு வரமாட்டேன். வந்தாலும் பணியைச் செய்ய மாட்டேன்.

5அ) செய்வினைத் தொடர் (வினையை அவனே செய்தான்)

அவன் வீட்டைக் கட்டினான், பறவை கூடு கட்டியது. நான் தம்பியை அடித்தேன்

5ஆ) செயப்பாட்டுவினைத் தொடர் (வினை அவனால் செய்யப்பட்டது)

வீடு அவனால் கட்டப்பட்டது. கூடு பறவையால் கட்டப்பட்டது. தம்பி என்னால் அடிக்கப்பட்டான்.

நேர் கூற்று - அயற்கூற்று

நேர் கூற்று = எழுவாய் தானே கூறுவதாகக் கூறுவது.

"நான் நன்றி மறந்தவனாக" வாழமாட்டேன் என்று நல்லான் கூறினான்.

அயற் கூற்று = அயலவர் / பிறர் கூறியது என்ன என்பதைக் கூறுவதாகும்.

நல்லான் தான் நன்றி மறந்தவனாக வாழமாட்டாமையைக் கூறினான்.

தொடரின் பல்வேறு வகைகள் மேலே கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வகையையும் அதன் தன்மை குறித்து உணர்ந்து உள்வாங்கவும். உங்களது சொந்த நடையில் அனைத்து வகையான தொடர்களுக்கும் எடுத்துக்காட்டுகள் எழுதிப் பழகவும்.

ஒரு தொடரில் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்பவை இருக்கும்.
பாடம் படித்துக் கொண்டிருக்கிறான். ( கொண்டு + இரு + கிறு + ஆன் )
பாடம் = பகுதி, ஆன் = விகுதி,
கொண்டு = வினைச்சொல், ஆன் = ஆண்பால், ஒருமை

பிழை எண் 9 : வினைச் சொற்களோடு, சந்தி, காலம் காட்டும் விகுதி, திணை, பால், ஒருமை, பன்மை, எச்சம், முற்று - என்பவற்றுக்கான சொற்களைப் பிழையாக அமைத்தல். சரியாக அமைக்காவிட்டால் பொருள் மாறுபடும். பிழை ஏற்படும். பிழை நீக்க ஒவ்வொரு தலைப்பையும் பொருள் உணர்ந்து நுட்பமாக உள்வாங்கவும்.